நாட்டிற்குச் சென்று அந்த முறையைக் கற்று வந்தால், சிறப்பாக அதை இங்கே நிறைவேற்றுவதற்கு வழி பிறக்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விஞ்ஞான அறிவு என்பது ஒரு நாட்டிலே அவர்களே வெற்றிகரமாக ஒரு காரியத்தை முடிப்பதற்கு உதவுவதாகும். விஞ்ஞான அறிவு மற்றவர்களுக்கு எளிதாகக் கிடைத்துவிடும். ரஷ்யா போகவேண்டும் என்ற ஆர்வத்தை என் மூலமாக நிறைவேற்றிக்கொள்வதாக இருந்தால் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : கடல் நீரை குடி நீராக மாற்றுவது என்பது தண்ணீர் கிடைக்காத இடங்களில் மேற் கொள்ள வேண்டிய ஒரு முயற்சி. ஆனல், சென்னையைச் சுற்றி 20 மைல், 30 மைல் அளவுக்கு கிரவுண்டு வாட்டர் பூமிக்கு அடியில் நிறையத் தண்ணீர் இருக்கிறது. வேண்டுமானல் குடிப்பதற்கு லாயக்கு இல்லாத தண்ணீராக இருக்கலாம். ஆனல் கடல் நீரை குடி நீராக ஆக்கவேண்டும் என்றல் அதற்கு நிறைய மின்சாரம் தேவைப்படுகிறது. நம்மிடம் மின்சாரம் இல்லே. அகவே, இந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்கள் அவசியமாக பரிசிலனை செய்து கொண்டு இருக்க வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவைசியமான வேலையிலே ஈடுபட்டிருப்பதைக் குறைப்பது நல்லது தான். உலகம் எங்கும் சில பிரச்னே பேசப்படும்பொழுது, நம்முடைய நாட்டிலும் அது பற்றி பேசப்படுவது இயற்கை. அந்த முறையில் கல்பாக்கம் அணு மின்சக்தி நிலேயத்தில் அவர்களுக்கு கிடைக்கின்ற ஒரு வெப்ப அலே மூலம் இயல்பாகவே அணு சக்தி மின் நிலேயத்தின் தேவைக் காகவே அதை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கருதி இருப் பார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. அது மத்திய அரசின் முயற்சியில் நடைபெறுகின்ற காரியமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலேவர் : 726 எண்ணுள்ள கேள்வி பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Bridges across A.V.M. Canal

*727 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that the bridges constructed in the A.V.M. Canal at several places need reconstruction in Kanyakumari district?

1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. என். டென்னிஸ் : இந்த ஏ.வி.எம். கால்வாயில் உள்ள பாலங்கள் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. சில பாலங்கள் மிகவும் அபாயகரமான நிலையில் இருக்கின்றன. மாவட்ட வளர்ச்சிக் குழுவின் கூட்டத்தில் இது பற்றி தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக் கிறது. ஆகவே, இந்தப் பாலங்களை உடனடியாக பழுது பார்ப்ப தற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா? எப்பொழுது அவைகள் பழுதுபார்க்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது வரையில் அந்தக் கால்வாயை யார் பராமரிப்பது, யார் மராமத்து செய்வது என்பது இல்லாமல் இருந்தது. இப்பொழுதுதான் அதைப் பொதுப் பணித் துறை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைத் துறையினிடம் சில தகவல்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. தகவல்கள் வந்தவுடன் வேலைகளை துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

Water-supply for ayacuts in Kanyakumari.

* 728 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the withering away of standing crops at Kanyakumari district due to inadequate supply of water during September 1973; and

(*b*) if so, the action taken thereon?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) பேச்சிப்பாறை பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களில் இருந்த தண்ணீரைக் கொண்டும், மேல் கோதையாறு நீர்த்தேக்கத்திலிருந்து அதிகப்படியான தண்ணீர் பெற்றும், வாய்க்கால்களுக்கு இடையே முறைப்பாசனம் ஏற்படுத்தி யும் கோதையாறு பட்டணம்கால் ஆயக்கட்டுப் பிரதேசத்தில் உள்ள விளைநிலங்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் செப்டம்பர் 73-ல் வளரும் பயிர்கள் எதுவும் வாடவில்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட் டத்தில் "டெயில் என்ட்" நிலங்களில் செப்டம்பர் மாதத்தில் கூட வளரும் பயிர்கள் வாடியும் கரிந்தும் காணப்படுகின்றன. அந்த